மாவட்டத்திற்கு 5,102 வீடுகள் ஒதுக்கப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் வடதலைக்குளம் இதில் இடம் பெறாததற்கு காரணம், பின்னால் 31—12—75-ல் 30 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கே அரசு ஆணையிட்டது. அதில் தென்னாற்காடு மாவட்டத்திற்கு 3,121 வீடுகள் மட்டும் தான் கிடைத்தது. அதனால் தான் இந்த ஊரில் வீடு கட்டப்படவில்லையே தவிர வேறு எந்தவிதமான காரணமும் இல்லை.

திரு. துரை முத்துசாமி: இங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டெண்டர்கள் விடப்பட்டதாக சொன்னார்கள். இந்த டெண்டர்கள் யார் யாருக்கு விடப்பட்டிருக்கிறது, அந்த விவரம் என்ன? இந்த டெண்டர்களுக்கு இன்னும் உயிர் இருக்கிறதா? அதற்குப் பிறகு 76-ல் விட்ட டெண்டர்களுக்கு இப்போது ஃபாலோ அப் ஆக்ஷன் இருக்கிறதா? மேலும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அந்த டெண்டர்களுக்கு இன்னும் உயிர் இருக்கிறதா என்று கேட்டார்கள். அது செத்து விட்டது என்பது தான் இங்கு இருக்கிற விவரங்களிலிருந்து தெரிகிறது. ஒதுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதினால்தான் வடதலைக்குளம் இடம் பெறவில்லை. வேறு எந்தக் காரணமும் இல்லை.

அணைக்கரைப் பட்டியில் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் ஆக்கிரமிப்பு.

*வினா எண். 726—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வ. புதுப்பட்டி பஞ்சாயத்தில் உள்ள அணைக்கரை பட்டி கிராமத்தில் அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்ட சுடுகாட்டு நிலத்தை தனியார் ஆக்கிரமித்து விவசாயம் செய்வது அரசுக்குதெரியுமா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், வ. புதுப்பட்டி ஊராட்சியில் உள்ள அணைக்கரைப்பட்டியில் அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்ட சுடுகாட்டு நிலத்தை திரு. **வடக்குத்திய தேவர் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று அரசுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.**

(ஆ) திரு. வடக்குத்திய தேவரின் ஆக்கிரமிப்பை வெளியேற்ற திருவில்லிபுத்தூர் வட்டாட்சியர் நடவடிக்கை எடுத்தார். இந்த நடவடிக்கையை எதிர்த்து திரு. வடக்குத்திய தேவர் திருவில்லிபுத்தூர் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் 688/78 எண்ணிட்ட உரிமையியல் வழக்கு மற்றும் 1117/78 எண்ணிட்ட உறுத்துக் கட்டளை மனு தொடர்ந்துள்ளார். வழக்கை எதிர்த்து எதிர் ஆணையுறுதிப் பத்திரம் மற்றும் எழுதிய வாக்குமூலம் 24—1—79 அன்று தாக்கல் செய்யப்பட்டன. வழக்கு முடிந்து தீர்ப்புரை கிடைத்த பின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இயற்றுகிற சட்டமும், நீதித் துறையும் பணக்காரர்களுக்கு ஆதரவாகத்தான் இருக்கிறது. ஏழை எளியவர்களுக்கு ஆதரவாக இல்லை. ஆதலால் இந்த அரசாங்கம் ஏழை எளியவர்களின் அரசாங்கமாக இருப்பதால், ஏதாவது ஒவர் லுக் பண்ணி சுடுகாட்டுக்கு நிலத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அரசாங்கம் வேண்டுமென்றால, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும். ஆனால் நீதிமன்றம் அனுதாபம் தெரிவிக்காது.

மிருகண்டா நதியின் குறுக்கே நீர்த்தேக்கம்.

*வினா எண் 727— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கலசபாக்கம் தொகுதியில் உள்ள மேல சோழங்குப்பம் கிராமம் அருகில் மிருகண்டா நதியின் குறுக்கே புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) வேலை எப்போது துவங்க உத்தேசம் ?

(ஈ) அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :—

(அ) இல்லை.

(ஆ), (இ) மற்றும் (ஈ) : இக் கேள்விகளுக்கு இடமில்லை.